بسم الله الرحمن الرحيم

# இஸ்லாமிய பாடத்திட்டம்

## ஹதீஸ் விளக்கவுரை


வெளியீடு

**இஸ்லாமிய அழைப்பு மையம்**

**ஜம்யிய்யத்து அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ்**
நாகர்கோவில்

குமரி மாவட்டம்

بسم الله الرحمن الرحيم

# ஹதீஸ் விளக்கவுரை

## ஹதீஸ் தொகுக்கப்பட்ட வரலாறு

இஸ்லாமிய நெறிமுறையில் அடிப்படை ஆதாரங்களாக அமைந்திருப்பவை அல்லாஹ்வின் அருள் மறையும் அண்ணல் நபிகளாரின் திருமறையும் ஆகும்.

திருக்குர்ஆன் உரைகள் முழுக்க முழுக்க அல்லாஹ்வின் வசனங்களே ஆகும். இறைவனால் அருளப்பட்ட அந்த உரைகளை அண்ணல் நபிகளார் (ஸல்) நாவினால் உரைத்தார்கள்.

திருக்குர்ஆன் மனித வாழ்வு செம்மையுறுவதற்கான எல்லா அடிப்படைகளையும் வகுத்துரைக்கிறது. அந்த அடிப்படையில் மனிதன் செயல்படுவதற்குரிய வழிமுறைகளை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தன் வாக்கின் மூலமும் வாழ்க்கையின் மூலமும் எடுததுரைத்து முறைப்படுத்தி இருக்கிறார்கள்.

இதுவே சுன்னா என அறியப்படுகிறது.அல்லாஹ்வையும் இறுதி நாளையும் உறுதியாக நம்பக்கூடியவர்களுக்கு அழகிய முன்மாதிரி நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடம் இருக்கிறது என திருக்குர்ஆன் கூறுகிறது. எனவே முஸ்லிம்கள் தங்களுடைய வாழ்வின் எல்லா நிலைகளுக்கும் அண்ணலாரின் வாழ்வையே முன்மாதிரியாகக் கொண்டு செயல்படத் தலைப்பட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் உயிர்வாழ்ந்த காலத்தில் அவர்களுடைய சொல் செயல் ஒப்புதல் நடை உடை பாவனை அனைத்தையும் நேரிலே கேட்கவும் காணவும் வாய்ப்பு பெற்ற நல்லறத் தோழர்கள் பேறு பெற்றவர்களாக விளங்கினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் காலத்திற்குப் பின்னாலே அவர்களின் வழிமுறைகளை அறிந்த ஸஹாபாக்கள் தம் காலத்தில் வாழ்ந்த ஆனால் அண்ணலாரைக் காணாத தோழர்களுக்கும் அடுத்து வரும் தலைமுறையினருக்கும் பயன்படத் தக்க விதத்தில் அண்ணலாரின் உரைகளைத் தொகுக்க முற்பட்டார்கள் தொகுத்ததை விரித்துரைத்து வந்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த நாவுரைகள் முஸ்லிம்களுடைய வாழ்வில் ஒளியூட்டும் அருளுரைகளாகத் திகழ்ந்தன.
இவையே ஹதீஸ் என அறியப்படலாயின.

ஹதஸ் என்ற வேர்ச் சொல்லில் இருந்து பெறப்பட்ட சொல்தான் ஹதீஸ். ஹதீஸ் என்றால் உரை உரையாடல் நிகழ்ச்சி புதிய செய்தி எனப் பொருள்படும்.

சிறந்த ஹதீஸ் அல்லாஹ்வுடைய வேதம்தான் என நபிகளார் கூறியதற்கு இணங்க சில சந்தப்பங்களில் திருக்குர்ஆனைக்கூட அதுவும் புதிய செய்தியைத் தந்தால் ஹதீஸ் என சொல்லப்பட்டாலும் இஸ்லாமிய மரபில் பெருமானாரின் திருவுரைகளே இன்று ஹதீஸ் என்று குறிப்பிடப்படுகின்றன.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறைவனிடமிருந்து பெற்ற வசனங்கள் அருள் வேதம் என அறியப்பட்ட அதே நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் அவற்றுக்கு விளக்கமாக தாம் உரைத்த நாவுரைகளே ஹதீஸ் என அறியப்படலாயிற்று.
இஸ்லாமிய நெறிமுறையில் இறைவனுடைய அருள் வேதமாகிய திருக்குர்ஆனுக்கு அடுத்த இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்னுரைத் தொகுப்புகளாகிய ஹதீஸ்கள் மதிக்கப்படுகின்றன.

திருக்குர்ஆனை முழுமையாக உணர்ந்து செயல்பட்ட ஹதீஸ் அறிவும் இன்றியமையாததாகும்.

இறைவனுடைய திருவேதமும் பெருமானார் (ஸல்) அவர்களின் வாய்மொழியாக வெளிப்பட்டதானாலும் அதன் முழுப் பொருளை நபிகளார் (ஸல்) அவர்களின் உரைகளும் வாழ்க்கை முறைகளுமே தெள்ளத் தெளிய விளக்குவனவாக அமைந்திருக்கின்றன.

எனவே திருக்குர்ஆனின் முழுப் பொருள் அறிய ஹதீஸ் அவசியம் என்ற பட்டறிவு இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருந்தது. தொடக்கத்தில் நல்லறத் தோழர்களான ஸஹாபாக்கள் தனித்தனியே கேட்டறிந்து நினைவில் வைத்திருந்த நபி உரைகள் நாளடைவில் ஒருவர் மற்றவருடன் பரிமாறி பரந்த அளவில் அறிந்து செயல்படத் துணை செய்வதாக மனித வாழ்வு முழுமையையும் பொதிந்த விளக்கமான நெறியாக உருப்பெற்றது.

இஸ்லாமிய வாழ்க்கை வழி என சொல்லப்படும் எல்லாத் துறைகளையும் தழுவியதாக கடமைகளை வகுத்துரைப்பதாக சட்டங்களை விரித்துச் சொல்வதாக தத்துவங்களை சுட்டிக் காட்டுவதாக ஹதீஸ் பேரிலக்கியம் தோன்றியது.

ஒரு முஸ்லிம் இம்மையிலும் மறுமையிலும் ஈடேற்றம் பெற வாழ்க்கையில் விரும்பி கொள்ள வேண்டியவையும் வெறுத்துத் தள்ள வேண்டியவையும் குர்ஆன் ஹதீஸின் அடிப்படையிலேயே சட்டமாக (ஷரீஅத்) வடிவெடுத்தது.

1. பர்ளு அல்லது வாஜிப் கட்டாயக் கடமை. இதைச் செய்யாவிட்டால் தண்டனை உண்டு.

2. மன்துப் அல்லது முஸ்தஹப் இந்தச் செயலுக்கு சன்மானம் உண்டு. இதைச் செய்யாவிட்டால் தண்டனை இல்லை.

3. ஜாயிஸ் அல்லது முபாஹ் இந்தச் செயல் அனுமதிக்கப்பட்டது. எனினும் சட்ட சம்மதம் பெற்றதாக ஆவதில்லை.

4. ஹராம் திட்டவட்டமாக தடுக்கப்பட்டது சட்டரீதியாக தண்டனைக்குரியது.

இந்த விவரங்களெல்லாம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளில் இருந்துதான் பெறமுடியும் எனவே அவர்களின் எல்லா நடைமுறைகளும் பழக்க வழக்கங்களும் துல்லியமாக சேகரிக்கப்பட்டு தீர்க்கமாகப் பதியப்பட்டன. இவையே இஸ்லாமிய ஷரீஅத்திற்கு சட்டத்திற்கு அடிப்படையாக அமைந்தன. என்றாலும் இறைவனுடைய அருள் உரையான திருக்குர்ஆனின் வசனங்கள் இவை என்றும் நபி (ஸல்) அவர்களின் நாவுரை இவை என்றும் பிரித்து அறிந்து பின்பற்றுவதில் பெரிதும் எச்சரிக்கை பேணப்பட்டது.

நல்லறத் தோழர்களான ஸஹாபாக்கள் காலத்திற்கும் பின்னர் நபி (ஸல்) அவர்களின் உரைகளைத் தொகுத்தவர்கள் குறிப்பிட்ட உரையை அவர்களிடமிருந்து நேரடியாகக் கேட்டவர்கள் அவர் சொல்லக் கேட்டவர்கள் என நபி (ஸல்) அவர்கள் உரையுடன் அவ்வுரையை எடுத்துரைத்த மக்களின் பெயர்களையும் தொகுத்துக் கூறி அதன் உண்மையை நிலைநாட்டினார்கள்.

எனவே ஹதீஸ் இரு பகுதிகளாக அமைந்தது. ஒன்று மதன் எனப்படும் மூலம் அடுத்து அதை எடுத்துரைத்தவர்களின் பட்டியலான இஸ்னாத் இவ்வாறாக நபி (ஸல்) அவர்களின் உரையின் உண்மையை நிலைநாட்ட அவர்களின் வாய்மொழியாக

அதைக் கேட்டவர் அவர்களிடமிருந்து அதைக் கேட்டவர் என ஹதீஸ்களை எடுத்துரைத்தவர்கள் வரலாற்றில் இடம்பெறத் தக்கவர்கள் ஆனார்கள்.

இப்படி எடுத்துரைத்தவர்கள் வாழ்க்கையில் ஒழுக்க சீலர்களாகவும் எந்தக் காலத்திலும் பொய் மொழியாதவர்களாகவும் மிகைப்படுத்திப் பேசாதவர்களாகவும் இருந்தார்களா? என்பது பற்றிய ஆய்வே நடந்திருக்கிறது.

நபி (ஸல்) அவர்களின் உரையில் குறைதல் ஏற்படாமல் கருத்து வேறுபாட்டுக்கு இடம் தராமல் அவர்கள் சொன்ன சொற்களே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதில் பெரும் கவனம் செலுத்தப்பட்டது.

நபி (ஸல்) அவர்களின் உரை ஒன்றையாவது இவ்வாறு எடுத்துரைத்தவர்கள் வரலாற்றில் இடம்பெறத் தக்க பெருமைக்குரியவர்களாக ஆனார்கள். இவ்வாறு ஹதீஸ்களை எடுத்துரைத்த பெரியவர்களின் பட்டியல் ஒரு லட்சத்திற்கும் மேல் பெருகியது.

இந்தப் பெரியவர்களின் வரலாற்றை ஆராய முற்பட்ட போது இதுவரை வரலாற்றுத் துறையில் ஏற்படாத ஒரு புதிய பிரிவு தோன்றியது. இதை அஸ்மாஉர்ரிஜால் எனக் குறிப்பிடுவர்.

பெருமானார் (ஸல்) அவர்களின் நல்லறத் தோழர்கள் அவர்களைக் கண்டு உரையாடிய தாபியீன்கள் அவர்களைக் கண்டு உரையாடிய தபஅத்தாபியீன்கள் என பல தலைமுறையினரின் காலம் வரை நபி (ஸல்) அவர்களின் உரைகள் பெரும்பாலும் மக்களின் இதயங்களிலே பதியப்பட்டு அவர்களின் வாய்மொழியாக எடுத்துரைக்கப்பட்டு வந்தது.

ஹிஜ்ரீ இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவற்றையெல்லாம் நூலுருவில் முறையாக தொகுக்கக்கூடிய பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு தொகுக்கப்பட்டபோது அந்த ஹதீஸின் கருப் பொருள் (மதன்) மற்றும் அதை எடுத்துரைத்தவர்களின் சீலம் வாய்மை நினைவாற்றல் வழி வழித் தொடர் ஆகியவையும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

ஹதீசின் கருப் பொருளைப் பொருத்து கீழ்க்கண்ட அடிப்படைகள் பேணப்பட்டன.

1. எந்தவொரு ஹதீஸும் திருக்குர்ஆனுடைய மூலத்திற்கு அதன் போதனைகளுக்கு முரண்படாததாகவும் இஸ்லாமிய அடிப்படைகளை உறுதிப்படுத்துவதாகவும் இருக்கவேண்டும்

2. ஏற்கெனவே மார்க்க மேதைகளால் ஆதாரப் பூர்வமானதாக அறிவிக்கப்பட்டு நடைமுறையில் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பவைகளுக்கு முரண்படாமல் இருக்கவேண்டும்.

3. குறிப்பாக ஒரு குலத்தினர் அல்லது ஒரு வட்டாரத்தினரின் பெருமைகளை பெரிதுபடுத்திப் பேசுபவை ஒதுக்கப்பட வேண்டும்.

4. எதிர்கால நிகழ்வுகளைப் பற்றி தேதி நிமிடம் முதலிய விவரங்களும் குறிப்பிட்டுச் சொல்லும் செய்திகளை புறந்தள்ள வேண்டும்.

5. பெருமானார் (ஸல்) அவர்களின் இஸ்லாமிய நம்பிக்கைக்கும் நபித்துவத்திற்கும் மாறாகவோ நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தகுதிக்கு ஏற்றதல்லாத நிலை எடுத்தார்கள் என்றோ அல்லது கருத்தைக் கூறினார்கள் என்றோ குறிப்பிடும் செய்திகள் உள்ள ஹதீஸ்களும் நிராகரிக்கப்பட வேண்டும்.

இத்தகைய கடுமையான விதிமுறைகளுக்குட்பட்டுத்தான் ஹதீஸ்கள் பதிவு செய்யப்பட்டன.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி எடுத்துரைத்த அறிவிப்பாளர் தொடரில் உள்ள பெரியார்களின் வாழ்வும் துல்லியமாக ஆராயப்பட்டது. அத்துடன் பொதுவே நல்லறத் தோழர்கள் பலர் முன்னிலையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் சொல்லப்பட்டதும் பெரியவர்கள் பலரால் எடுத்துரைக்கப்பட்டதுமான ஹதீஸ்களைத் தொகுப்பதில் முன்னுரிமை தரப்பட்டது.

திருக்குர்ஆனுக்கு அடுத்த இடம் ஹதீஸுக்கு இருந்த காரணத்தால் இவ்வளவு விதிமுறைகளை அவர்கள் கடைப்பிடித்ததிலும் நியாயம் இருக்கவே செய்தது.

எடுத்துரைத்தவர் பட்டியலில் ஏதாவது இடைவெளி நேருமாயின் அல்லது அந்த பட்டியலிலுள்ளவர்களில் ஒழுக்க சீலத்தில் ஏதாவது குறைபாடு கருதப்பட்டாலும் அவர்கள் சொல்லக்கூடிய ஹதீஸ்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை.

கடுமையான விதிமுறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹதீஸ்கள் ஸஹீஹ் ஒச்சமற்ற ஹதீஸ்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன.

அறிவிப்பாளர் தகுதிகளில் சிறிய குறைபாடு இருந்து வேறுபல வழிகளில் அறிவிக்கப்பட்ட ஹதீஸின் கருத்தை சொல்லக்கூடியதாக இருந்தால் அது ஹஸன் என அறியப்பட்டன.

விதிமுறைகளில் தேறாத ஹதீஸ்கள் ளயீ.்.ப் பலஹீனமானவை என்று குறிப்பிடப்பட்டன.

இத்தகைய ஹதீஸ்களில் என்ன குறை இருக்கிறது என்பதும் மார்க்க மேதைகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

கற்பனையாக புனையப்பட்ட உண்மையல்லாதவை மவ்ழூ.். என ஒதுக்கப்பட்டது.

உலக வரலாற்றில் எந்தவொரு தீர்க்கதரிசியின் உரையும் இந்த அளவுக்கு நுணுகி ஆராயப்பட்டதாக எடுத்துக் காட்டு இல்லை. இவ்வளவு கவனத்தோடு தொகுக்கப்பட்டவற்றில் ஆறு தொகுப்புகள் இஸ்லாமிய வரலாற்றில் முக்கியமானவையாகும்.

1. ஸஹீஹ் அல்புகாரீ (2) ஸஹீஹ் முஸ்லிம் (3) சுனன் இப்னுமாஜா
4. சுனன் அபூதாவூது (5) ஜாமிஉத் திர்மிதீ (6) சுனன் நஸாயீ

இவற்றில் திருக்குர்ஆனுக்கு அடுத்து ஆதாரப்பூர்வமானது என அனைத்துத் தரப்பினராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது ஸஹீஹுல் புகாரீ ஆகும். புகாரா என்னும் ஊரில் பிறந்த இமாம் முஹம்மது பின் இஸ்மாயீல் என்ற மாமேதையால் தொகுக்கப்பட்டதுதான் ஸஹீஹுல் புகாரீ எனும் நபிமொழி தொகுப்பாகும். அதையடுத்த இடங்களை மேற்கண்ட மற்ற தொகுப்புகள் பிடிக்கின்றன.

## முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு முன்மாதிரி

நபிகளாரிக் வாழ்க்கை முறைகள் பற்றிக் குர்ஆன் கூறுகின்றது.. ..

உங்களில் யார் அல்லாஹ்வையம் இறுதிநாளையும் உறுதியாக நம்பி அல்லாஹ்வை அதிகமாகத் துதி செய்கின்றாரோ அவர்களுக்கு இறைத்தூதரிடத்தில் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கின்றது. (33:21).

அல்லாஹ்வின் தூதரைச் சமூகத்திற்கு ஓர் அழகிய முன்மாதிரி என நாம் கொள்வதாயின் எல்லா வகையிலும் அன்னாரது முன்மாதிரியை நாம் பின்பற்றியாக வேண்டும். ஏனெனில் நாம் அவ்வாறு செய்ய வேண்டுமென்றே அல்லாஹ்வும் கட்டளையிட்டிருக்கின்றான்.

இம்மூன்று அடிப்படை அம்சங்களும் அல்லாஹ்வின் தூதரில் ஒன்றுபட்டு விளங்குவதனால் முஸ்லிம் சமூகத்தவர் அனைவரும் தமது எல்லாக் கருமங்களிலும், செயல்களிலும் நபிகளாரைப் பின்பற்றியொழுக வேண்டியது அவசியமாகும். இதனை, எல்லாம் வல்ல அல்லாஹ், விவாதத்திற்குரிய ஓர் அம்சமாக விட்டு விடவில்லை. இது குறித்து எவ்வித விவாதமும் தேவையில்லாத வகையில் சந்தேகமற அல்லாஹ் விளக்கம் அளித்துள்ளான். நபிகளாரைப் பூரணமாகப் பின்பற்றியொழுகும்படி அல்லாஹ் விடுத்த கட்டளைகள் மிகத் தெளிவான வசனங்களில் அமைந்துள்ளது.

## நபிகளாரைப் பூரணமாகப் பின்பற்றுதல்

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான் :

அல்லாஹ்வின் அனுமதியின் அடிப்படையில் மக்கள் கட்டுப்பட்டு நடப்பதற்காகவேயன்றி நாம் எந்தவொரு தூதரையும் அனுப்பி வைக்கவில்லை. (4:64)

அல்லாஹ் மேலும் கூறுகின்றான்:

(நபியே!) மேலும், நீர் கூறும் : அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் நீங்கள் வழிபடுங்கள். ஆனால் நீங்கள் கட்டுப்படாது புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போரை நேசிப்பதில்லை. (3:32).

மேலும் கூறுகின்றான் :

அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் வழிப்படுங்கள் (அதனால்)நீங்கள் (அல்லாஹ்வின்) கிருபைக்கு ஆளாக்கப்படுவீர்கள் (3:132).

அல்லாஹ் மேலும் கூறுகின்றான் :

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள். இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள். உங்களில் ஏதாவது ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்படுமானால் - மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் - அதை அல்லாஹ்விடமும், (அவன்) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள் - இதுதான் (உங்களுக்கு) மிகவும் சிறப்பான, அழகான முடிவாக இருக்கும். (4:59)

இது குறித்து மேலதிக விளக்கங்கள் தேவைப்படாத அளவுக்கு ஏராளமான வாசகங்கள் குர்ஆனில் பரவலாகக் காணப்படுகின்றன.

இவ்வாசகங்களிலிருந்து அல்லாஹ்வின் கட்டளைகளும் நபிகளாரின் செயல்முறை முன்மாதிரிகளும் எல்லா முஸ்லிம்களையும் கட்டுப்படுத்தவல்லது என்பது புலனாகும். அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஒரே மாதிரி அடிபணிந்து ஒழுக வேண்டியது அவசியமாகும். நபிகளாரின் பூரண வாழ்வு முஸ்லிம்கள் அனைவருக்கும் ஒரு

முன்மாதிரியாகும். எனவே, அதனை அவசியம் பின்பற்றல் கடமையுமாகும். நபிகளாரின் கட்டளைகளைச் செயற்படுத்தவதில் எந்த ஒரு முஸ்லிமும் சிறதளவேனும் தயக்கம் காட்டக் கூடாது. பின்பற்றி நடப்பது என்பது இங்கு பூரண மனதுடன் அவற்றை ஏற்று நடத்தலாகும். அரை மனதுடன் அடிபணிதல் அல்ல.

அல்லாஹ் கூறுகின்றான் :

உம் இறைவன் மேல் சத்தியமாக, அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக, ஏற்றுப் பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரையில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள் (4:65)

மேலும், அல்லாஹ் கூறுகின்றான் :

ஆகவே (நம்முடைய) தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனவிருப்பத்தோடு) எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை உங்களுக்குத் தடுத்துக் கொண்டாரோ, அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். (59:7).

இவை நபிகளாரின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் சில குர்ஆன் வசனங்களாகும். அவையே நபிகளாரின் முழுவாழ்வும், முடிவுகளும், தீர்ப்புகளும், நீதி முறைமைகளும், கட்டளைகளும், ஒவ்வொரு தனிப்பட்ட முஸ்லிம் சமூகம், முஸ்லிம் அரசு ஆகிய அனைத்தினதும், அனைத்துத் துறைகளிலும் பின்பற்றியொழுகப்பட வேண்டியன என்பதையும் உணர்த்துகின்றன.

நபிகளாரின் அனைத்துக் கருமங்களும் சுன்னாவினுள் இடம் பெற்றுள்ளன. இதுவே, இது காலவரையும், இனி வருங்காலங்களிலும் கூட இஸ்லாமியச் சட்டங்களின் மூலாதாரங்களில் ஒன்றாக விளங்குவது. இதனை மிகைத்ததாக அமைவது குர்ஆன் மட்டுமே.

## நபி வழியை பின்பற்றுவதின் அவசியம்

இஸ்லாத்தின் அடிப்படைகளில் முதலானதும் மிக முக்கியமானதும் அல்லாஹ்வை இறைவனாகவும் முஹம்மது (ஸல்) அவர்களை நபியாகவும் உள்ளத்தால் ஏற்று நாவால் மொழிந்து உறுப்புக்களால் செயல்படுவதாகும். அல்லாஹு த்தஆலா முதல் மனிதராக ஆதம் (அலை) அவர்களைப் படைத்தான். அவரிலிருந்து அவரின் மனைவி ஹவ்வா (அலை) அவர்களைப் படைத்தான். அவ்விருவரிலிருந்தே உலகத்தில் தோன்றிய எல்லா மனிதர்களும் தோன்றினார்கள். இந்த மக்கள் பல மொழி பேசக்கூடியவர்களாகவும் பல கலாச்சாரம் உள்ளவர்களாகவும் வாழ்ந்தார்கள். இதனால் அந்தப் பகுதியில் வாழக்கூடிய அவரவர்களின் மொழி பேசக்கூடிய நல்ல மனிதர் ஒருவரையே அல்லாஹ் அவரவர்களுக்கு தூதராகத் தேர்ந்தெடுத்தான். தூதர்கள் அனுப்பப்படாத சமுதாயமே கிடையாது.

ஒவ்வொரு தூதர்களும் அவர்களின் கூட்டத்துக்கு தூதராக அனுப்பப்பட்டார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்கள் உலக மக்கள் அனைவருக்கும் தூதராக அனுப்பப்பட்டார்கள்.

(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ஓர் அருட்கொடையாகவேயன்றி அனுப்பவில்லை. (21:107)

முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவில் பிறந்து அவர்களின் நாற்பதாவது வயதில் தூதரானார்கள். நபித்துவத்திற்குப் பின் மக்காவில் 13 ஆண்டுகளும், மதீனாவில் 10 ஆண்டுகளும் வாழ்ந்தார்கள். அவர்களின் அறுபத்தி மூன்றாவது வயதில் மதீனாவில்

மரணித்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் மரணித்தாலும் அல்லாஹ்வின் வார்த்தைகளும் நபியவர்கள் விட்டுச் சென்ற அவர்களின் பொன்மொழிகளும் நம்மிடம் இன்னும் உயிருடன் இருந்து கொண்டிருக்கின்றன. அவ்விரண்டையும் பின்பற்றி நடக்கும் வரை நாம் வழிதவறவே மாட்டோம்.

நான் உங்களுக்கு இரண்டை விட்டுச் செல்கின்றேன் அவ்விரண்டையும் பின்பற்றி நடக்கும் வரை நீங்கள் வழிதவறவே மாட்டீர்கள், (அவ்விரண்டும்) குர்ஆன் இன்னும் என்னுடைய சுன்னாவாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஅத்தா மாலிக்)

ஆகவே நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து நமக்கு எத்தி வைத்த எல்லா செய்திகளையும் ஏற்று அதன்படியே நடப்பது நம் அனைவர்மீதும் கடமையாகும்.

எதையாவது ஒன்றை நான் உங்களுக்கு ஏவினால், அதில் முடியுமானதைச் செய்யுங்கள். ஏதாவது ஒன்றை நான் உங்களை விட்டும் தடுத்தால் அதை முற்றாகத் தவிர்ந்து கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நஸாயி)

## ஹதீஸ் தேவையில்லை என்று சொல்பவர்களிடம் ஒரு சில கேள்விகள்

1- தொழுகை கடமை என்று குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றது. ஒரு நாளைக்கு எத்தனை தடவை தொழ வேண்டும்? ஒவ்வொரு தொழுகையின் ஆரம்ப நேரம் மற்றும் முடிவு நேரம் என்ன? ஒவ்வொரு தொழுகையிலும் எத்தனை ரக்அத்துக்கள் உள்ளன? தொழும் முறை என்ன? என்பது பற்றி குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றதா? என்றால் இல்லை, இவை அனைத்தும் ஹதீஸில்தான் கூறப்பட்டிருக்கின்றது. குர்ஆன் மாத்திரம் போதும் என்று சொல்பவர்கள் தொழும் தொழுகையும் ஹதீஸில் சொல்லப்பட்டது போன்றுதான் இருக்கின்றதே. இவர்கள் ஹதீஸை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று நாவினால் கூறினாலும் செயல்வடிவத்தில் எற்றுக் கொண்டுதான் இருக்கின்றார்கள். காரணம் ஹதீஸை ஏற்காமல் அவர்களால் இஸ்லாத்தை முழுமையாக விளங்க முடியாது.

2- ஜகாத் கொடுக்க வேண்டும் என்றுதான் குர்ஆனில் சொல்லப்பட்டிருக்கின்றது ஆனால் தங்கத்தில் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்றோ, வெள்ளியில் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்றோ, கால்நடைகளில் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்றோ, தானியங்களில் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்றோ சொல்லப்படவில்லை. ஆனால் ஹதீஸில் இதன் அளவுகள் சொல்லப்பட்டிருக்கின்றது.

3- ஹஜ் செய்ய வேண்டும் என்றுதான் குர்ஆனில் சொல்லப்பட்டிருக்கின்றது ஹஜ் செய்யும் முறை என்ன? எந்த மாதத்தில்? பிறை எத்தனையில் ஆரம்பித்து எத்தனையில் முடிக்க வேண்டும்? என்பதெல்லாம் ஹதீஸில்தானே இருக்கின்றது. ஹதீஸை பின்பற்றாமல் இவைகளை எப்படி விளங்க முடியும்? நிச்சயமாக முடியாது.

குர்ஆன் மாத்திரம் போதும் என்று சொல்பவர்கள் இந்த கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லப்போகின்றார்கள். ???

சில நேரத்தில் அவர்கள் அர்த்தமற்ற சில பதில்களைத் தரலாம். அதாவது நாங்கள் ஹதீஸைப் பின்பற்றி இவைகளைச் செய்யவில்லை, மக்கள் செய்வதை பார்த்துதான் செய்கின்றோம் எனலாம்.

இது புத்தியுள்ளவர்கள் கூறும் விடையல்ல, மக்கள் செய்வதைப் பார்த்துச் செய்வது வணக்கமாகுமா? ஒரு வாதத்திற்கு அவர்கள் சொல்வதை சரி என எடுத்துக் கொண்டாலும் இது நடைமுறைக்கு ஒத்துவராதது என்பது தெளிவாக தெரிந்துவிடும். இன்று முஸ்லிம்களில் பலர் வணக்கத்தை வித்தியாசமான பல முறைகளில் செய்கின்றார்கள். யார் செய்வது சரியானது? யார் செய்வது தவறானது? என்பதை எதை

வைத்து தெரிந்து கொள்வது. இதற்கு அளவுகோல் ஹதீஸ் இல்லாமல் வேறென்ன இருக்கமுடியும்? உதாரணத்திற்கு இன்று தொழுகையை பல விதத்தில் தொழுது கொண்டிருக்கின்றார்கள். ஒரு நாளைக்கு ஐந்து நேரம் தொழ வேண்டிய தொழுகையை மூன்று நேரம் தொழுதால் போதும் என்றும், தொழுகையே இல்லை! ஐந்து நேரம் திக்ர் செய்தால் போதும் என்று சொல்பவர்களும் இருக்கின்றார்கள். இவைகளில் எது சரி, எது பிழை என்பதை எதை வைத்து தெரிந்து கொள்வது, நன்றாக சிந்தித்துப்பாருங்கள். ஆகவே ஹதீஸை பின்பற்றியே ஆகவேண்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

### மார்க்கத்தில் எல்லை கடக்கக்கூடாது

நபி (ஸல்) அவர்களை புகழுகின்றோம் என்று கூறிக்கொண்டு அவர்களை எல்லைகடந்து அல்லாஹ்வின் அந்தஸ்திற்கே உயர்த்திக் கூறுவது பெரும் ஷிர்க்காகும்.

நபி (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் அந்தஸ்திற்கு உயர்த்திப் பாடக்கூடிய எத்தனையோ மவ்லிது பாடல்கள் நம் சமுதாயத்தில் நிறைந்து கிடக்கின்றன. அவைகள் அனைத்தும் முற்றாக தடுக்கப்பட வேண்டியவைகளாகும்.

மர்யம் (அலை) அவர்களுடைய மகன் ஈஸா (அலை) அவர்களை கிறிஸ்தவர்கள் மிகைப்படுத்தி புகழ்ந்ததைப் போன்று என்னை நீங்கள் மிகைப்படுத்திப் புகழாதீர்கள். நானும் ஒரு அடியார்தான். ஆகவே, (என்னை) அல்லாஹ்வின் அடியார் மற்றும் அவனின் தூதர் எனக்கூறுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி,முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் ஒரு நயவஞ்சகன் விசுவாசிகளை துன்புறுத்துபவனாக இருந்தான். அப்போது (நபித்தோழர்களான) அவர்களில் சிலர் சிலரை நோக்கி எங்களுடன் வாருங்கள்! இந்த நயவஞ்சகனி(ன் தீமையி)லிருந்து அல்லாஹ்வின் தூதரிடம் இரட்சிக்கத் தேடுவோம், எனக் கூறினார்கள். (இதைச் செவியுற்ற) நபி (ஸல்) அவர்கள் என்னிடம் இரட்சிப்புக் கோரலாகாது, இரட்சிப்பு தேடப்படுவதெல்லாம் அல்லாஹ்வைக் கொண்டுதான் எனக் கூறினார்கள். (தப்ரானி)

நபி (ஸல்) அவர்களை அளவு கடந்து மக்கள் உயர்த்தும் போது நபியவர்கள் அதைத் தடுத்துள்ளார்கள் என்பது இவ்விரு ஹதீஸிலிருந்தும் தெளிவாக விளங்குகின்றது. இன்று முஸ்லிம்களில் சிலர் நபியவர்களுக்கு மறைவான ஞானம் இருக்கின்றது என்றும், நபியவர்களைக் கொண்டு உதவி தேடலாம் என்றும், நபியவர்களிடம் பாவமன்னிப்புக் கேட்டால் பாவத்தை மன்னிப்பார்கள். என்றெல்லாம் பிதற்றுகிறார்கள். இவைகளெல்லாம் நபியவர்களை அளவுக்கு மேல் புகழ்வதாகும்.

மார்க்கத்தில் எல்லை கடப்பதை நான் எச்சரிக்கை செய்கின்றேன். உங்களுக்கு முன் சென்றவர்கள் அழிக்கப்பட்டதெல்லாம் மார்க்கத்தில் எல்லை கடந்ததினால்தான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நஸாயி)

### பித்அத் என்றால் என்ன?

அல்லாஹ்வும் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் காட்டித்தராதவைகளை மார்க்கம் என்று சொல்வதற்கு, செய்வதற்கு பித்அத் என்று சொல்லப்படும்.

அல்லாஹ்வாலும் அவனின் தூதராலும் காட்டித்தராத அதிக செயல்கள் இஸ்லாம் எனும் பெயரில் இன்று இஸ்லாத்திற்குள் புகுத்தப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட எல்லா செயல்களிலிருந்தும் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வது மிக அவசியமாகும்.

## பித்அத்தான செயல்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது

யார் இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக உருவாக்குகின்றாரோ அது அல்லாஹ்விடத்தில் எற்றுக்கொள்ளப்படமாட்டாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

யார் இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக செய்கின்றாரோ அது அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

இவ்விரு ஹதீஸிலிருந்தும் பித்அத்தான செயல்கள் அனைத்தும் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பது நமக்கு தெளிவாக விளங்குகின்றது.

எல்லா பித்அத்தும் வழிகேடாகும்

இஸ்லாத்தில் புதிதாக (ஒன்றை) உருவாக்குவதிலிருந்து உங்களை நான் எச்சரிக்கை செய்கின்றேன். ஏனென்றால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட அனைத்தும் பித்அத்தாகும், அனைத்து பித்அத்தும் வழிகேடாகும், என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

இன்னும் ஒரு அறிவிப்பில்: அனைத்து வழிகேடும் நரகத்துக்கு கொண்டு செல்லக்கூடியவை எனவும் வந்திருக்கின்றது.

எல்லா பித்அத்துகளும் வழிகேடு என்று நபி (ஸல்) அவர்கள் தெளிவாகச் சொல்லியிருந்தும், இன்று முஸ்லிம்களில் சிலர், எல்லா பித்அத்தும் வழிகேடல்ல, கெட்ட பித்அத்துக்கள்தான் வழிகேடாகும், நல்ல பித்அத்துக்கள் வழிகேடல்ல என்று பித்அத்துக்களை இரண்டாக பிரிப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்கின்றது. இது முற்றிலும் தவறாகும்.

நபி (ஸல்) அவர்கள் பித்அத்துக்களை விவரிக்கும் போது “குல்லு பித்அத்தின் ளலாலத்துன்” என்றே கூறினார்கள். “ குல்லு” என்றால் எல்லாம் என்பது பொருள். “குல்லு பித்அத்தின் ளலாலத்துன்” என்றால் எல்லா பித்அத்தும் வழிகேடு என்றுதான் பொருள். அரபு இலக்கணம் தெரிந்த யாரும் இதை மறுக்கமாட்டார்கள். இதற்குப்பிறகும் சில பித்அத் வழிகேடு, சில பித்அத் நல்லது என்று கூறுவது நபியவர்களின் ஹதீஸு க்கு தவறான விளக்கம் கொடுத்ததாக ஆகாதா??? இனிமேலாவது சிந்தித்துப் பார்க்கட்டும்!

## பித்அத்தினால் ஏற்படும் விளைவுகள்

1-இஸ்லாத்திற்குள் பல தவறுகள் ஊடுருவதற்கு மிகப் பெரும் காரணம்.

2-பித்அத் செய்பவர் பித்அத்தை விடாதவரை அவருடைய தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (தர்கீப் வதர்ஹீப்)

3-மறுமையில் கவ்தர் தடாகத்தின் தண்ணீரை அருந்த விடாமல் அவர் தடுக்கப்படுவார். (புகாரி)

## எப்படி நபியவர்களை நேசிப்பது?

நபி (ஸல்) அவர்களை நேசிப்பது அனைத்து முஃமின்களின் கடமையாகும். தன் உயிரை விடவும் நபி (ஸல்) அவர்களை நேசிக்காதவர் உண்மை முஃமினாக முடியாது. நபி (ஸல்) அவர்களை நேசிப்பதென்பது அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தை முழுமையாக பின்பற்றுவதாகும்.

யார் என்னை நேசிக்கின்றாரோ அவர் என் வழிமுறைகளை பின்பற்றட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (பைஹகி)

எதையாவது ஒன்றை நான் உங்களுக்கு ஏவினால், அதில் முடியுமானதைச் செய்யுங்கள். ஏதாவது ஒன்றை நான் உங்களை விட்டும் தடுத்தால் அதை முற்றாகத் தவிர்ந்து கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நஸாயி)

நபி (ஸல்) அவர்களின் சுன்னாவை முழுமையாக பின்பற்றி, அவர்கள் தடுத்த அனைத்தையும் தடுத்து நடக்க நம் அனைவருக்கும் அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக.

## வணக்கம்

### தூய எண்ணம்

அறிவிப்பாளர் : உமர் பின் கத்தாப் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

செயல்கள் அனைத்தின் விளைவுகளும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. மனிதன் எதை எண்ணுகின்றானோ, அதற்குரிய பலன்தான் அவனுக்குக் கிட்டும்.

(உதாரணமாக) ஒருவரின் ஹிஜ்ரத் அல்லாஹ்வுக்காகவும், ரஸூலுக்காகவும் அமையுமாயின் அந்த ஹிஜ்ரத் அல்லாஹ்வுக்காகவும், ரஸூலுக்காகவும் செய்யப்பட்டதாகும். ஒருவரின் ஹிஜ்ரத் ஏதாவது உலகாயத நன்மையைப் பெறுவதற்காகவோ, ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காகவோ அமையுமாயின் இவற்றில் எதற்காக வேண்டி அவன் ஹிஜ்ரத் செய்தானோ, அதற்கானதாகவே அவனது ஹிஜ்ரத் கணிக்கப்படும். (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபியவர்கள் கூறினார்கள்: இறைவன் உங்கள் உருவங்களையோ உங்கள் செல்வங்களையோ பார்ப்பதில்லை: மாறாக, உங்கள் உள்ளங்களையும் செயல்களையும் தான் பார்க்கின்றான் (முஸ்லிம்)

### தொழுகையின் முக்கியத்துவம்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

"உங்களில் ஒருவருடைய வீட்டு வாயிலின் அருகில் ஆறு ஒன்று ஓடுகிறது என வைத்துக் கொள்வோம். அதில் அவர் ஒவ்வொரு நாளும் ஐவேளை குளித்து வந்தாரென்றால், அவருடைய உடலில் சிறிதளவாயினும் அழுக்கு எஞ்சியிருக்குமா?" என பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் வினவினார்கள்.

அதற்குத் தோழர்கள், "இல்லை! அவருடைய உடலில் சிறிதளவும் அழுக்கு இராது" என்றார்கள். "இது போன்றுதான் ஐவேளைத் தொழுகையும்! அல்லாஹ் இத்தொழுகைகளின் மூலம் பாவக்கறைகளைப் போக்குகின்றான்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் அருளினார்கள். (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி)

ஒருவர் ஓர் அன்னியப் பெண்ணை முத்தமிட்டார். உடனே தம் தவறை உணர்ந்து வெட்கமும், வேதனையும் அடைந்தார். "நம் கதி என்னவாகுமோ?"என நினைத்து அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஓடி வந்து நிலைமையை விளக்கினார்.

செய்த தவறை உணர்ந்து வேதனையால் துடிக்கும் அவருக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வரும் திருமறையின் வசனத்தை ஓதி ஆறுதல் அளித்தார்கள்.

"பகலின் இரு முனை(களாகிய காலை, மாலை)களிலும் இரவு சிறிது கழிந்த நேரத்திலும் தொழுகையை நிலைநாட்டுவீராக! நிச்சயமாக நன்மைகள் பாவங்களைப் போக்கிவிடும்." (திருக்குர்ஆன் 11:114)

இதைக்கேட்ட அந்த மனிதர் "எனக்கு மட்டும்தானா?" என வினவினார்.

"இல்லை! இது என்னைப் பின்பற்றும் உம்மத்தினர் (சமூகத்தினர்) அனைவருக்கும்தான்" என நவின்றார்கள் நாயகம் (ஸல்) அவர்கள். (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : உபாதா பின் ஸாமித் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) நவின்றார்கள்: "ஐவேளைத் தொழுகைகளை அல்லாஹ் மக்கள் மீது கடமையாக்கியுள்ளான். எவர் சிறந்த முறையில் ஒளு செய்து, இத்தொழுகைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுகிறாரோ - இன்னும் எவருடைய உள்ளம் தொழுகையில் பணிந்திருக்கிறதோ அவரை மன்னிப்பது இறைவனின் பொறுப்பாகும். மேலும், எவர் இவ்வாறு தொழுகையைப் பேணிச் செயல்படவில்லையோ அவரை இறைவனின் மன்னித்தருளுதல் எனும் பொறுப்பான வாக்குறிதி சேராது. இறைவன் நாடினால் அவரை மன்னிப்பான், நாடினால் தண்டிப்பான்." (அபூதாவூது)

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருநாள் தொழுகையைக் குறித்து உரை நிகழ்த்தினார்கள். அப்போது பின்வருமாறு கூறினார்கள்: "எவர் தம் தொழுகைகளைச் சரியான முறையில் பேணி வருகின்றாரோ அவருக்கு - அவரது தொழுகை இறுதித் தீர்ப்புநாளில் ஒளியாகவும் ஆதாரமாகவும் அமையும். ஈடேற்றத்திற்கு காரணமாக அமையும். எவர் தமது தொழுகைகளைப் பேணவில்லையோ அவருக்கு அத்தொழுகை ஒளியாகவும் அமையாது, ஆதாரமாகவும் ஆகாது, ஈடேற்றத்திற்கான சாதனமாகவும் இருக்கா்." (முஸ்னத் அஹமத், இப்னுஹிப்பான்)

**ஜகாத், ஸதகா,**

அறிவிப்பாளர் : அப்பாஸ் (ரலி)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நிச்சயமாக அல்லாஹ் மக்களின் மீது ஸதகாவை (தானதர்மத்தை) கடமையாக்கியுள்ளான். அது அவர்களக்குள் பொருள் வசதி படைத்தவர்களிடம் வாங்கப்பட்டு, ஏழ்மையுள்ளவர்களிடம் திருப்பித் தரப்படும்." (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள் "ஒருவனுக்கு அல்லாஹ் பொருள் வசதி அளித்திருந்தும் அவன் அதற்குரிய ஜகாத்தைக் கொடுக்கவில்லையாயின், அவனுடைய அப்பொருள் மறுமைநாளில் கொடிய நச்சுத்தன்மை கொண்ட பாம்பாக மாறும். அதன் தலையில் இரு கரும்புள்ளிகள் காணப்படும் (கொடிய நச்சுத்தன்கை கொண்ட பாம்பு என்பதற்கு இது அடையாளமாகும்.) அப்பாம்பு அவனுடைய கழுத்தில் வளையமாகச் சுற்றப்படும். அவனின் இரு தாடைகளையும் பிடித்துக் கொண்டு அப்பாம்பு கூறும்:

“நான்தான் உன்னுடைய பொருள், நான்தான் உன்னுடைய செல்வக் களஞ்சியம்!”

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வரும் குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்:

“அல்லாஹ் தனது அருளிலிருந்து தங்களுக்கு வழங்கியுள்ளவற்றில் எவர்கள் கஞ்சத்தனம் செய்கிறார்களோ அவர்கள் அதனை தமக்கு நல்லது என எண்ணிட வேண்டாம். மாறாக அது அவர்களுக்கு மிகவும் கெட்டதாகும். தமது கஞ்சத்தனத்தின் மூலம் அவர்கள் சேமித்துவைத்ததெல்லாம் மறுமைநாளில் அவர்களின் கழுத்தில் விலங்காகப் பூட்டப்படும். (அதாவது அது அவர்களின் பேரழிவுக்கு காரணமாகிவிடும்)”(3:180) (புகாரி)

அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி)

“நான் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டிருக்கிறேன்: “ஜகாத்துக்குரிய பங்கு கலந்திருக்கும் பொருளிலிருந்து ஜகாத்தைப் பிரித்தெடுக்காவிடில் அது அசல் பொருளையே அழித்துவிடும்.” (மிஷ்காத்)

அறிவிப்பாளர் : ஹுதைஃபா (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன் “தன் குடும்பத்தார், தன் செல்வம், தன் அண்டைவீட்டார் ஆகியோர் விஷயத்தில் ஒரு மனிதன் செய்யும் தவறுகளுக்கு தொழுகை, தர்மம் ஆகியன பரிகாரம் ஆகின்றன.” (புகாரி)

## நோன்பு

அறிவிப்பாளர் : ஸல்மான் பார்ஸீ (ரலி)

ஷஅபான் மாதத்தின் கடைசித் தேதியில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உரையாற்றினார்கள். அதில் அவர்கள் கூறியதாவது: “மக்களே! மகத்துவமும், அருள்வளமும் மிக்க மாதம் ஒன்று நெருங்கிவிட்டது. அந்த மாதத்தின் ஓர் இரவு, ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும். அல்லாஹ் அந்த மாதத்தில் நோன்பு நோற்பதை கடமையாக்கியுள்ளான். இந்த மாதத்தின் இரவுகளில் தராவீஹ் தொழுவதை நஃபிலாக்கியுள்ளான். (அதாவது இந்தத் தொழுகை கடமையானதல்ல. மாறாக சுன்னத்தாகும். இதனை அல்லாஹ் விரும்புகின்றான்.) யார் இந்த மாதத்தில் தானாக மனமுவந்து ஒரு நற்செயலைச் செய்கின்றாரோ அவர் ரமளானல்லாத பிற மாதங்களில் ஒரு கடமையை நிறைவேற்றியவரைப் போன்றவராவார். இந்த மாதத்தில் ஒரு கடமையை நிறைவேற்றுபவர் ரமளானல்லாத பிற மாதங்களில் எழுபது கடமைகளை நிறைவேற்றியவரைப் போன்றவராவார். ஆமலும், இது பொறுமையின் மாதமாகும், பொறுமையின் கூலி சுவனமாகும். மேலும், இந்த மாதம் சமுதாயத்திலுள்ள ஏழைகள் - தேவையுள்ளோர் மீது அனுதாபமும் பரிவும் செலுத்த வேண்டிய மாதமாகும்.” (மிஷ்காத்)

## ஹஜ்

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடையே உரையாற்றிய போது கூறினார்கள்: “மக்களே! அல்லாஹ் உங்கள் மீது ஹஜ்ஜைக் கடமையாக்கியுள்ளான். எனவே ஹஜ் செய்யுங்கள்!” (அல் முன்தகா)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள் :

ஒருவர் இந்த (கஅபா) ஆலயத்தை தரிசிக்க வருகை தந்து, மனஇச்சை சம்பந்தமான சொல் எதனையும் பேசாமலும், இறைவனுக்கு மாறு செய்யும் செயல் எதனையும் செய்யாமலும் இருந்தால் - அவனுடைய அன்னை அவனைப் பெற்றெடுத்த அதே நிலையில் அவன் தன் வீட்டுக்குத் திரும்பிச் செல்வான். (அதாவது, அல்லாஹ் அவனுடைய பாவங்கள் அனைத்தையும் மன்னித்து விடுவான். தூய நிலையில் அம்மனிதன் வீடு திரும்புவான். )

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் எந்தச் செயல் சிறந்தது? என வினவப்பட்டபோது, ‘‘அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை கொள்வது’’ என பதிலளித்தார்கள். அதன் பின்னர் எந்தச் செயல் சிறந்தது? என வினவப்பட்டபோது, ‘‘இறை நெறிக்காக ஜிஹாத் செய்வது’’என பதிலளித்தார்கள். அதன் பின்னர் எந்தச் செயல் சிறந்தது? என வினவப்பட்டபோது, ‘‘எந்த ஹஜ்ஜில் மனிதன் இறைவனுக்கு மாறு செய்யவில்லையோ அந்த ஹஜ்’’ என அண்ணலார் பதிலளித்தார்கள். (அல் முன்தகா)

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள் : ‘‘ஹஜ் செய்ய நாடுபவன் சீக்கிரம் சீக்கிரமாகப் செய்திட வேண்டும். ஏனெனில் அவன் நோயுற்று விடவும் கூடும், ஒட்டகம் தொலைந்துவிடவும் கூடும். (அதாவது, பயணத்திற்கான வழிவகைகள் அடைபட்டுப் போய்விடக்கூடும், பாதை அபாயகரமானதாகி விடக்கூடும். )

மேலும் ஹஜ் பயணத்திற்கான செலவுத்தொகை தீர்ந்துவிடக்கூடும், அல்லது ஹஜ் பயணம் சாத்தியமாகாத அளவுக்கு வேறு ஏதாவது தேவை ஏற்பட்டுவிடக்கூடும். (எனவே விரைந்து ஹஜ்ஜை நிறைவேற்றுங்கள்! ஹஜ்ஜை நிறைவேற்றாமல், இறை ஆலயத்தை தரிசிக்க முடியாது போகும் கடினமான சூழ்நிலை ஏற்படலாமே!)’’ (இப்னுமாஜா)

அறிவிப்பாளர் : ஹஸன் (ரலி)

‘‘உமர் பின் கத்தாப் (ரலி) கூறினார்கள் : ‘‘இஸ்லாம் கைப்பற்றியுள்ள இந்நகரங்களில் சில ஆட்களை அனுப்பி, ஹஜ் செய்யும் சக்தியிருந்தும் ஹஜ் செய்யாமலிருப்பவர்கள் யார், யார்? என்று ஆய்வு செய்து அவர்கள் மீது ஜிஸ்யா (முஸ்லிமல்லாத குடிமக்களிடம் வசூலிக்கப்படும்) வரி விதித்திட நான் நாடியுள்ளேன். இவர்கள் முஸ்லிம்கள் அல்லர்! இவர்கள் முஸ்லிம்கள் அல்லர்!

(இவர்கள் முஸ்லிம்களாக இருந்திருந்தால், எப்போதோ ஹஜ் செய்திருப்பார்களே! முஸ்லிம் என்பதன் பொருள், தன்னைத்தானே அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுபவன்.

ஒருவர் உண்மையிலேயே தம்மை அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிட்டிருந்தால், எவ்விதக் காரணமுமின்றி ஹஜ் போன்ற மகத்தான வணக்கத்தைக் குறித்து அவர் அலட்சியமாக இருந்திருக்க முடியுமா?)’’

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘ஒருவர் ஹஜ்ஜோ, உம்ராவோ, ஜிஹாதோ செய்யும் எண்ணத்துடன் தன் வீட்டுலிருந்து புறப்பட்டு வழியிலேயே

மரணித்துவிட்டால், அல்லாஹ் அவருக்கு ஹஜ் செய்தவர், அறப்போர் வீரர், உம்ரா செய்தவர் ஆகியோருக்குரிய நற்கூலியை வழங்குவான்.'' (மிஷ்காத்)

# சமூகவியல்

## நிக்காஹ் (திருமணம்)

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி)

''இளைஞர்களே! உங்களில் திருமணத்தின் பொறுப்பைச் சுமக்கும் சக்தி படைத்தவர் மணம் புரிந்து கொள்ளட்டும். ஏனெனில் திருமணம் பார்வையைத் தாழ்த்துகின்றது. வெட்கத்தலத்தைப் பாதுகாக்கின்றது. (பார்வை இங்கும் அங்கும் அலைபாய்வதை விட்டும் காம இச்சையினால் சுகந்திரமாகத் திரிவதை விட்டும் பாதுகாக்கிறது) திருமணத்தின் பொறுப்பை சுமக்கச் சக்தியற்றவர் இச்சையின் வேகத்தைத் தணித்திட அவ்வப்போது நோன்பு வைத்துக் கொள்ளட்டும்.'' (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

''நான்கு விஷயங்களுக்காக பெண் மணமுடிக்கப்படுகிறாள், அவளுடைய செல்வத்திற்காக, அவளுடைய குலச் சிறப்புக்காக, அவளுடைய அழகுக்காக, அவளுடைய மார்க்கப்பற்றுக்காக! நீர் மார்க்கப் பற்றுடைய மங்கையையே அடைந்து கொள்ளும், உமக்கு நலம் உண்டாகட்டும்!'' (புகாரி, முஸ்லிம்)

## பெற்றோர்கள், உறவினர்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகள்

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

ஒரு மனிதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வினவினார் :

''அல்லாவின் தூதரே! நான் நல்லவிதமாக நடந்துகொள்ள அனைவரையும் விட அதிக உரிமை பெற்றவர் யார்?'' நாயகம் (ஸல்) அவர்கள் ''உம்முடைய அன்னையே மிகவும் உரிமை பெற்றவர்கள்'' என்று கூறினார்கள். அதற்கு அம்மனிதர் ''அவருக்குப் பிறகு யார்?'' என்று கேட்டார். நாயகம் அவர்கள் ''உம்முடைய அன்னைதான்!'' என்று பதிலளித்தார்கள். அம்மனிதர் ''பிறகு யார்?'' என்று மீண்டும் வினவினார். ''உம்முடைய தந்தை. அதற்கு அடுத்து படிப்படியாக உமது நெருங்கிய உறவினர்கள் உம் நன்னடத்தைக்கு உரியவர்கள்''என நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

''அவன் மூக்கு மண்ணாகட்டும்! (அதாவது அவன் இழிவடையட்டும்!)''இவ்வாறு மூன்று முறை கூறினார்கள். மக்கள் வினவினார்கள் - ''அல்லாஹ்வின் தூதரே, யார்? (அதாவது, யார் இழிவடையட்டும், யாரை இப்படிக் கடிந்துகொள்கிறீர்கள்?'') ''முதுமைப்பருவத்தில் தன் தாய் தந்தையரில் ஒருவரையோ - இருவரையுமோ பெற்றிருந்தும் (அவர்களுக்குப் பணிவிடை புரிந்து) சுவனம் புகாதவன்.''(முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அஸ்மா பின்த் அபீபக்ர் (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

“தாய் தந்தையருடன் கண்ணியக் குறைவாக நடந்து கொள்வதையும், பெண் குழந்தைகளை உயிரோடு புதைப்பதையும், பேராசையையும், கஞ்சத்தனத்தையும் இறைவன் உங்கள் மீது ஹராமாக்கியுள்ளான். நீங்கள் வீண் பேச்சு பேசுவதையும், அதிகமாகக் கேள்வி கேட்பதையும், செல்வத்தை வீணடிப்பதையும் அவன் வெறுக்கின்றான்.”

அறிவிப்பாளர்:அபூஹுரைரா (ரலி)
ஒரு மனிதர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்:

“அல்லாஹ்வின் தூதரே! எனக்குச் சில உறவினர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய உரிமைகளை நான் நிறைவேற்றுகின்றேன். அவர்கள் என் உரிமைகளை நிறைவேற்றுவதில்லை. நான் அவர்களுடன் நல்லவிதமாக நடந்து கொள்கின்றேன். அவர்கள் என்னுடன் மோசமாக நடந்து கொள்கிறார்கள். நான் அவர்களுடன் பொறுமையோடும் சகிப்புத் தன்மையோடும் நடந்து கொள்கிறேன். அவர்கள் என்னுடன் அறிவீனமாக நடந்து கொள்கிறார்கள்.” அதற்கு நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: “நீர் சொல்வதைப் போன்றே அவர்களுடன் நடந்து கொண்டிருந்தால், அது அவர்களின் முகத்தில் கரி பூசுவது போன்றதாகும். அல்லாஹ் அவர்களுக்கு எதிராக எப்போதும் உமக்கு உதவிய வண்ணம் இருப்பான், நீர் இதே பண்பில் நிலைத்திருக்கும் வரை!” (முஸ்லிம்)

## மனைவியரின் உரிமைகள்

அறிவிப்பாளர்:ஹகீம்பின்முஆவியா (ரலி)
ஹகீம் பின் முஆவியா (ரலி) அவர்கள் தம் தந்தை முஆவியா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அவர்கள் (முஆவியா (ரலி) கூறினார்கள். நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் “ஒரு மனைவிக்கு தன் கணவன் மீது என்னென்ன உரிமைகள் உள்ளன (அதாவது அவளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் யாவை?)” என்று வினவினேன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள் : “நீங்கள் உண்ணும் போது அவளையும் உண்ணச் செய்யுங்கள், உடை வாங்கும்போது அவளுக்கும் உடை வாங்கிக் கொடுங்கள், அவளது முகத்தில் அடிக்காதீர்கள். அவளைச் சபிக்காதீர்கள், அவளுடன் தொடர்பை விட்டுவிட நேர்ந்தால், வீட்டில் மட்டும் தொடர்பைத் துண்டித்துக் கொள்ளுங்கள். இவையே உம் மனைவிக்கு இருக்கும் உரிமைகள். (அதாவது அவளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள்).” (அபூதாவூத்)

## கணவனின் உரிமைகள்

அறிவிப்பாளர் : அனஸ் (ரலி)

நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்:

“ஒரு பெண் ஐவேளைத் தொழுகையையும் தொழுது, ரமளான் மாதத்தில் நோன்பு நோற்று வருகின்றாள், மேலும் தன் வெட்கத்தலத்தைப் பாதுகாத்துக் கொண்டு, தன் கணவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கின்றாள் எனில், அவள் சொர்க்கத்தின் வாயில்களில்

எந்த வாயிலை விரும்புகின்றாளோ, அதன் வழியாக சுவனத்துள் நுழையட்டும்! ” (மிஷ்காத்)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது: “எந்தப் பெண் (மனைவி) அனைவரையும் விடச் சிறந்தவள்? ” அண்ணலார் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: “எந்தப் பெண் தன் கணவன் தன்னைப் பார்க்கும் போது அவனை மகிழ்விப்பாளோ, அவன் கட்டளையிட்டால் அவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பாளோ, தன் விஷயத்திலும், தன்னுடைய பொருளிலும் தன் கணவனுக்கு விருப்பமில்லாத எந்தப் போக்கையும் மேற்கொள்ளமாட்டாளோ அத்தகையவளே, அனைவரையும்விடச்சிறந்தவள். ” (நஸாஈ)

## குழந்தைகள் உரிமைகள்

அறிவிப்பாளர் : ஸயீதுப்னுல் ஆஸ் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

“தந்தை தன் மக்களுக்கு அளிக்கும் அன்பளிப்புகளில் மிகச் சிறந்தது அவர்களுக்கு அளித்திடும் நல்ல கல்வியும் நல்லொழுக்கப் பயிற்சியுமேயாகும். ”(மிஷ்காத்)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

“உங்கள் குழந்தை ஏழு வயதை எட்டிவிடும்போது தொழுகையை நிறைவேற்றும்படி அவர்களை ஏவுங்கள்! அவர்கள் பத்து வயதை எட்டிவிடும்போது தொழுகையைத் தவறவிட்டால் அவர்களை அடியுங்கள்! இந்த வயதை அடைந்ததும் அவர்களின் படுக்கையைத் தனித்து அமையுங்கள்! ” (முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

“மனிதன் இறந்துவிடும்போது அவனது செயலும் முடிவடைந்து விடுகின்றன. ஆனால் மூன்று வகையான செயல்களுக்கு மட்டும் அவன் இறந்த பின்னாலும் நற்கூலி கிடைத்தக் கொண்டே இருக்கின்றது.

1. தொடர்ந்து நீடித்துப் பலன் தரும் நிலையான நல்லறம் எதையேனும் ஆற்றிவிட்டுச் செல்வது.

2. மக்கள் பயனடையக்கூடிய கல்வியை அளித்துவிட்டுச் செல்வது.

3. அவனுக்காக இறைஞ்சிய வண்ணமிருக்கும் அவன் பெற்றெடுத்த மகன். ” (மிஷ்காத்)

## ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிமின் மீதுள்ள உரிமைகள்

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜின்போது (இதற்குப் பிறகு அண்ணலார் உலகைவிட்டு விடைபெற்றுச் சென்றார்கள்) தம் உம்மத்தினரை - இறைநம்பிக்கை கொண்ட இலட்சியக் குழுவினரை - நோக்கி உரையாற்றிய வண்ணம் கூறினார்கள்:

“கேளுங்கள்!

“உங்களுடைய இந்த நாளும் இந்த மாதமும் இந்த நகரமும் எவ்வாறு கண்ணியத்திற்குரியனவாய்த் திகழ்கின்றனவோ, அவ்வாறே அல்லாஹ் உங்கள் இரத்தத்தையும், செல்வத்தையும், மானத்தையும், கண்ணியத்துக்குரியனவாய் ஆக்கிவைத்துள்ளான். கேளுங்கள்! நான் உங்களிடம் (இறைவனின் தூதை) சேர்ப்பித்து விட்டேனா? “ மக்கள் “ஆம்! நீங்கள் சேர்ப்பிதது விட்டீர்கள்! ” என்று பதிலளித்தனர். “இறைவா! நான் என் சமுதாயத்தினர்க்கு உன் தூதை சேர்ப்பித்துவிட்டேன் என்பதற்கு நீயே சாட்சியாக இரு! ” என்று அண்ணலார் கூறினார்கள். அண்ணலார் இந்தச் சொற்களை மும்முறை நவின்றார்கள். பிறகு, மேலும் கூறினார்கள்: “கேளுங்கள்! எனக்குப் பிறகு, நீங்கள் முஸ்லிம்களாய் இருந்துகொண்டே ஒருவரோடொருவர் போரிடும் வகையில் நிராகரிப்பாளர்களாகி விடாதீர்கள். ” (புகாரி)

அறிவிப்பாளர் : ஜரீர் பின் அப்துல்லாஹ் (ரலி)

“நான் தொழுகையை நிலைநாட்டுவதாகவும், ஜகாத் கொடுப்பதாகவும், ஒவ்வொரு முஸ்லிமுக்கும் நலம் நாடுவேன் என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் பைஅத் - உறுதிப் பரமாணம் செய்தேன். ” (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : நுஃமான் பின் பஷீர் (ரலி)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

“தமக்கிடையே இரக்கம் காட்டுவதிலும், அன்பு செலுத்துவதிலும், ஒருவரையொருவர் சார்ந்து நிற்பதிலும் ஓர் உடலைப் போல முஸ்லிம்களை நீ காண்பாய்! ஓர் உறுப்புக்கு நோய் ஏதும் வந்துவிட்டால் உடலின் மற்ற உறுப்புகளும் உறங்காமல் காய்ச்சலால் (வாடி அதன் துன்பத்தில் பங்குகொண்டு) துணை நிற்கின்றது. ” (புகாரி)

அறிவிப்பாளர் : அபூமூஸா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

“ஒரு முஸ்லிமுக்கும் இன்னொரு முஸ்லிமுக்குமிடையிலான தொடர்பு ஒரு கட்டத்திற்கு ஒப்பானதாகும். அதன் ஒரு பகுதி மற்றொரு பகுதிக்கு வலுவூட்டுகின்றது. ” பிறகு அண்ணலார் ஒரு கரத்தின் விரல்களை மற்றொரு கரத்தின் விரல்களில் பதித்துக் காட்டினார்கள். (புகாரி, முஸ்லிம்)

## முஸ்லிமல்லாத குடிமக்களின் உரிமைகள்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

“ஒப்பந்தக்காரன் (முஸ்லிமல்லாத குடிமகன்) ஒருவனுக்கு ஒரு முஸ்லிம் அநீதியிழைத்துவிட்டாலோ -அவனது உரிமையைப் பறித்தாலோ -(பாதுகாப்பு வரியான ஜிஸ்யாவுக்கு மேல்) அவனது சக்திக்கு மீறிய சுமைகளை அவன் மீது சுமத்தினாலோ - அவனது பொருள் எதையேனும் பலவந்தமாக எடுத்துக்கொண்டாலோ நான் மறுமைநாளில் இறைவனின் நீதிமன்றத்தில் அந்த முஸ்லிமுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வழக்கில் அந்த முஸ்லிமல்லாத குடிமகனின் வழக்கறிஞராக வாதாடுவேன்.” (அபூதாவூத்)

பிராணிகளின் உரிமைகள்

அறிவிப்பாளர் : ஸு ஹைல் பின் ஹன்ஸா (ரலி)

ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஓர் ஒட்டகத்தைக் கடந்து சென்றார்கள். அந்த ஒட்டகத்தின் முதுகு அதன் வயிற்றுடன் ஒட்டியிருந்தது. எனவே, அண்ணலார் கூறினார்கள்: ''இந்த வாயில்லாப் பிராணிகளின் விஷயத்தில் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவை ஆரோக்கியமாக நல்ல நிலையில் இருக்கும்போது அவற்றின் மீது சவாரி செய்யுங்கள், நல்ல நிலையிலேயே அவற்றை விட்டு இறங்குங்கள்.'' (அபூதாவூத்)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''நீங்கள் செழிப்பான காலத்தில் பயணம் செய்தால் ஒட்டகங்களுக்கு அவற்றின் உணவுப் பங்கை பூமியிலிருந்து கொடுங்கள். பஞ்சகாலத்தில் நீங்கள் பயணம் செய்வீர்களாயின் அவற்றை வேகமாக ஓட்டிச் செல்லுங்கள். '' (முஸ்லிம்)

## நடைமுறைகள்

ஹலாலான - அனுமதிக்கப்பட்ட வழியில் சம்பாதித்தல்.

அறிவிப்பாளர் : மிக்தாத் பின் மஅதீகரீப் (ரலி)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: ''எந்த மனிதனும் தன்னுடைய கரங்களால் உழைத்து உண்ணும் உணவைவிட வேறு உயர்ந்த உணவை என்றுமே உண்டதில்லை. அல்லாஹ்வின் தூதர் தாவூத் (அலை) அவர்கள் தம் கரங்களால் (உழைத்து) சம்பாதித்த உணவையே உண்பவர்களாக இருந்தார்கள்.'' (புகாரி)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்: அல்லாஹ் தூயவன், அவன் தூய்மையான பொருட்களையே ஏற்றுக் கொள்கிறான். அல்லாஹ் தன்னுடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டவற்றையே இறைநம்பிக்கையாளர்களுக்கும் கட்டளையிடுகின்றான். மேலும் அல்லாஹ் கூறினான் : ''தூதர்களே! தூய ஆகாரத்தையே புசித்து நற்செயல் புரியுங்கள்!'' (23 : 53)

இறைநம்பிக்கையாளர்களை நோக்கி இறைவன் இவ்வாறு கூறினான்: ''நம்பிக்கையுடையவர்களே! நாம் உங்களுக்கு அருளிய ஹலாலான, தூய ஆகாரத்தையே புசியுங்கள்.'' (7 : 10)

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு மனிதனைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவன் நெடிய பயணம் மேற்கொண்டு புழுதி படிந்து, அழுக்கடைந்த நிலையில் புண்ணியத்தலத்துக்கு வருகின்றான். தனது இரு கரங்களையும் வானத்தை நோக்கி உயர்த்தி, ''என் இறைவனே!''(என்று இறைஞ்சுகிறான்). ஆயினும் அவன் உண்ணும் உணவு, பருகும் நீர், உடுத்தியிருக்கும் ஆடை அனைத்துமே ஹராமானவை - தடுக்கப்பட்ட வழியில் வந்தவை. அவன் முழுமையான ஹராமிலேயே வளர்ந்துள்ளான். அவ்வாறெனில் இத்தகையோனின் இறைஞ்சுதல் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்? (முஸ்லிம்)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ''மக்களிடையே ஒரு காலம் வரும். அப்போது மனிதன் தான் ஈட்டிய பொருள் ஹலாலானதா (அனுமதிக்கப்பட்டதா) அல்லது ஹராமானதா (தடுக்கப்பட்டதா) என்பதையெல்லாம் பொருட்படுத்த மாட்டான்.''(புகாரி)

### கடன் பட்டவரிடம் மென்மையாக நடந்து கொள்ளுதல்

அறிவிப்பாளர் : ஹு தைஃபா (ரலி)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''ஒருவன் மக்களுக்குக் கடன் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் தன்னுடைய பணியாளை வசூலுக்கு அனுப்பும்போது இப்படிக் கூறுவது வழக்கம்: நீ வறுமையில் வாடும் கடனாளியிடம் சென்றால் அவனை விட்டுவிடு! அல்லாஹ் நம்மையும் மன்னித்துவிடக் கூடும். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''இவன் அல்லாஹ்வை அடைந்தபோது அல்லாஹ்வும் அம்மனிதனை மன்னித்தே விட்டான்'' (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அபூகதாதா (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: ''மறுமை நாளில் துயரத்திலிருந்தும் கடினத்திலிருந்தும் அல்லாஹ் தம்மைக் காப்பாற்ற வேண்டுமென்று விரும்புபவர், வசதியற்ற கடனாளிக்குத் தவணை கொடுக்கவும், அல்லது அவன் மீதுள்ள கடன் சுமையை நீக்கிவிடவும்!'' (முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அபூஸயீத் அல் குத்ரீ (ரலி)

பெருமானார் (ஸல்) அவர்களிடம் தொழவைப்பதற்காக இறந்து போன ஒருவருடைய ஜனாஸா கொண்டுவரப்பட்டது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், ''இறந்துபோன இவர்மீது ஏதேனும் கடன் தொகை பாக்கியுள்ளதா?'' என்று கேட்டார்கள். அதற்கு மக்கள் ''ஆம்! இவர்மீது கடன் உண்டு'' என்றனர்.

''கடனை நிறைவேற்றும் அளவுக்கு அவர் ஏதேனும் பொருளை விட்டுச் சென்றுள்ளாரா?'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் வினவினார்கள்.

மக்கள், ''இல்லை'' என்று பதில் கூறினார்கள். ''அவ்வாறென்றால் நீங்களே அவருக்கு ஜனாஸா தொழுது கொள்ளுங்கள்! (நான் தொழ மாட்டேன்)'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்நிலையினைக் கண்ட அலீ (ரலி) அவர்கள், ''அல்லாஹ்வின் தூதரவர்களே! அக்கடனை அடைக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்'' என்றார்கள். பிறகுதான் பெருமானார் (ஸல்) அவர்கள் முன்வந்து தொழவைத்தார்கள்.

மேலும், மற்றோர் அறிவிப்பில் உள்ளதுபோல் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''அலீயே! அல்லாஹ் உம்மை நரகத்திலிருந்து காப்பாற்றுவானாக! முஸ்லிமான சகோதரர் ஒருவரின் கடனை அடைக்கும் எந்த முஸ்லிமையும் அல்லாஹ் மறுமைநாளில் விடுதலை செய்யாமல் இருக்கமாட்டான்!'' (ஷரஹு ல் ஸு ன்னா)

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''இறைவழியில் உயிரைத் தியாகம் செய்தவனின் ஒவ்வொரு பாவமும் மன்னிக்கப்பட்டுவிடும், கடனைத் தவிர!'' (முஸ்லிம்)

### அபகரிப்பும் மோசடியும்

அறிவிப்பாளர்: ஸயீத்பின் ஸைத் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு மனிதன், இன்னொரு மனிதனின் ஒரு சாண் நிலத்தை அநியாயமாக அபகரித்துக் கொண்டால், அல்லாஹ் இறுதித் தீர்ப்பு நாளில் ஏழு பூமிகளை அவனது கழுத்தில் விலங்காகப் போடுவான்." (புகாரி, முஸ்லிம்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

"கேளுங்கள்: அக்கிரமம் செய்யாதீர்கள்! எவருடைய செல்வமும் உங்களுக்கு ஆகுமானதன்று: செல்வத்தின் உரிமையாளர், அதனைத் தன் விருப்பத்துடன் உங்களுக்கு கொடுத்தாலே தவிர!" (பைஹகீ)

அறிவிப்பாளர் : அபூ உமாமா (ரலி)

நபி (ஸல்) அவர்கள் புகன்றார்கள்: " 'ஆரியா' நிறைவேற்றப்படும், 'மின்ஹா' திருப்பித் தரப்படும், 'கடன்' திரும்பக் கொடுத்து விடப்படும். பிணையேற்பவன் பிணையை பொறுப்புடன் நிறைவேற்றுவான்." (திர்மிதி)

### தொழிலாளியின் கூலி

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரலி)

"கூலியாளின் வியர்வை உலருவதற்குமுன் அவருடைய கூலியைக் கொடுத்து விடுங்கள்!" (இப்னு மாஜா)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "அல்லாஹ் கூறுகின்றான்: மறுமை நாளில் மூன்று வகை மனிதர்களிடம் நான் தர்க்கம் செய்வேன்:

1. என் பெயரைக் கூறி உடன்படிக்கை செய்து, பிறகு அதை முறித்தவன்.

2. சுகந்திரமான ஒரு மனிதனைக் கடத்திச் சென்று, விற்று, அந்தப் பணத்தில் சாப்பிட்டவன்.

3. ஒரு கூலியாளை வேலையில் அமர்த்தி, முழுவேலையையும் வாங்கிவிட்டு அவனுடைய கூலியைக் கொடுக்காதவன்!" (புகாரி)

### வட்டி

அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வட்டி வாங்குபவர்கள் மீதும், வட்டி கொடுப்பவர்கள் மீதும், அவ்விருவருக்கும் சாட்சியாக இருப்பவர்கள் மீதும், வட்டி கணக்கு எழுதுபவர்கள் மீதும் சாபமிட்டார்கள். ( புகாரி, முஸ்லிம்)

### இலஞ்சம்

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: "இலஞ்சம் வாங்குபவர் மீதும், இலஞ்சம் கொடுப்பவர் மீதும் இறைவனின் சாபம் உண்டாகட்டும்". (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி

**சந்தேகத்திற்கிடமானவற்றிலிருந்து விலகி இருத்தல்.**

அறிவிப்பாளர் : நுஃமான் பின் பஷீர் (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: "ஹலாலும் (அனுமதிக்கப்பட்டதும்) தெளிவாக உள்ளது. ஹராமும் (தடுக்கப்பட்டதும்) தெளிவாக உள்ளது. ஆனால் இவ்விரண்டுக்குமிடையே சந்தேகத்திற்குரிய சில விஷயங்கள் உள்ளன. சந்தேகத்துக்குரிய பாவங்களிலிருந்து விலகி இருப்பவன் பகிரங்கமான பாவங்களிலிருந்தும் கண்டிப்பாக விலகியே இருப்பான். சந்தேகத்திற்குரிய பாவங்களில் துணிவுடன் ஈடுபடுபவன் வெளிப்படையான பாவங்களில் வீழ்ந்துவிட பெரிதும் வாய்ப்புண்டு. பாவங்கள் அல்லாஹ்வினால் தடை செய்யப்பட்ட பகுதிகளாகும் (அவற்றினுள் நுழைந்திட அனுமதியில்லை, அதனுள் அத்துமீறி நுழைந்துவிடுவது குற்றமாகும்.) தடை செய்யப்பட்ட பகுதியின் அருகே மேய்கின்ற பிராணி அதனுள் புகுந்துவிட பெரிதும் வாய்ப்புண்டு." (புகாரி, முஸ்லிம்)

## நற்குணங்கள்

**குணங்களின் முக்கியத்துவம்.**

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

'நான் அல்லாஹ்வின்பாலிருந்து நற்குணங்கள் முழுமைப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.'(இமாம் மாலிக் (ரஹ்)அவர்களின் முஅத்தா)

'அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வெட்கமற்ற பேச்சை தம் நாவால் பேசுவதுமில்லை, வெட்கமற்ற செயலை செய்வதுமில்லை. மேலும், 'உங்களில் நற்குணமுடையவரே உங்களில் சிறந்தவர் ஆவார்' என்று கூறுவார்கள். (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : முஆத் (ரலி)

'அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என்னை யமன் நாட்டுக்கு அனுப்பும் வேளையில், நான் என் வாகனத்தில் கால் வைக்கும்போது கூறிய அறிவுரை இதுதான்: 'மக்களிடம் நீர் நற்குணத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.' (இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் முஅத்தா)

**கம்பீரம் - நிதானம்**

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அப்துல் கைஸ் குலத்தாருடைய தூதுக் குழுவின் தலைவரை (அவரது பட்டப் பெயர் ஸுஷஜ் என்பதாகும்) நோக்கி (பாராட்டும் வகையில்) கூறினார்கள்: 'உம்மிடம் அல்லாஹ்வுக்கு விருப்பமான இரு குணங்கள் உள்ளன. அவை சகிப்புத்தன்மையும் (உணர்ச்சிவசப்படாமையும்), கம்பீரமான நிதானமும்தாம்.' (முஸ்லிம்)

**எளிமையும் தூய்மையும்.**

அறிவிப்பாளர் : அபூ உமாமா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'எளிமையாக வாழ்வது இறைநம்பிக்கையின்பாற்பட்டதாகும்.' (அபூதாவூத்)

அறிவிப்பாளர் : ஜாபிர் (ரலி)

ஒரு முறை எங்களைச் சந்திக்க அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் வருகை தந்தார்கள். அப்போது உடலில் புழுதி படிந்த தலைவிரிகோலமான ஒரு மனிதரை அண்ணலார் கண்டார்கள். 'இந்த மனிதரிடம் தலைவாரிக் கொள்வதற்குச் சீப்பு எதுவும் இல்லையா?' என்று அண்ணலார் வினவினார்கள். பிறகு, அண்ணலார் அழுக்கான ஆடைகள் அணிந்திருந்த இன்னொரு மனிதரைக் கண்டார்கள். ' இந்த மனிதரிடம் ஆடைகளைத் துவைத்துக் கொள்வதற்கான பொருள் (சோப்பு) இல்லையா?' என்று கேட்டார்கள். (மிஷ்காத்)

அறிவிப்பாளர் : அதாஉ பின் யஸார் (ரலி)

ஒரு முறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலினுள் இருந்தபோது, தலைமுடியும் தாடியும் ஒழுங்கின்றிக் கிடந்த ஒரு பள்ளிவாசலினுள் நுழைவதைக் கண்ட அண்ணலார் அவர்கள், அவரைப் பார்த்து 'திரும்பிப் போய் தலையையும் தாடியையும் சீப்பால் வாரி ஒழுங்குபடுத்திக் கொண்டு வா' என் சைகை காட்டினார்கள். அவர் அவ்வாறே சென்று தலைமுடியை வாரிக் கொண்டு திரும்பி வந்தார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ' மனிதனின் தலைமுடி தாறுமாறாகக் கலைந்துபோய், அவன் ஷைத்தானைப் போல் காட்சியளிப்பதைவிட இது நல்லதல்லவா?' என்று கூறினார்கள். (மிஷ்காத்)

அறிவிப்பாளர் : அபுல் அஹ்வஸ் (ரலி)

(தம் தந்தையார் கூறியதாக அறிவிக்கின்றார்:) நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருச்சமுகத்திற்கு சென்றேன். அப்போது நான் அணிந்திருந்த ஆடைகள் சாதாரணமான வையாகவும், தரம் குறைந்தவையாகவும் இருந்தன. அண்ணலார் 'உம்மிடம் செல்வம் உள்ளதா?' என் வினவினார்கள். நான் இதற்கு, 'ஆம்' என்றேன். அதற்கு அண்ணலார், 'எத்தகைய செல்வதம்?' எனக் கேட்டார்கள். ' அல்லாஹ் எல்லாவிதமான் செல்வத்தையும் எனக்கு வழங்கி இருக்கின்றான். என்னிடம் ஒட்டகங்களும் உள்ளன, பசுக்களும் உள்ளன, ஆடுகளும் உள்ளன, குதிரைகளும் உள்ளன, அடிமைகளும் உள்ளனர்' என்று நான் பதில் கூறினேன். அதற்கு, 'அல்லாஹ் உமக்கு இவ்வளவு செல்வம் கொடுத்திருக்கிறான் எனில், அவனது அருளின் அடையாளம் உங்கள் உடலில் வெளிப்பட்டிருக்க வேண்டும்' என்று அண்ணலார் கூறினார்கள். (மிஷ்காத்)

## ஸலாம் சொல்வது

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர். 'இஸ்லாத்தின் எந்தச் செயல் சிறந்தது?' என்று வினவினார்கள். அதற்கு அண்ணலார், ஏழை எளியவர்களுக்கு உணவளிப்பதும், ஒவ்வொரு முஸ்லிமுக்கு ஸலாம் சொல்வதுமாகும் - அவர் உமக்குச் தெரிந்தவராயிருப்பினும் சரி, தெரியாதவராயிருப்பினும் சரியே!' (அதாவது, அவர் உம்மிடம் பழகியவராயிருப்பினும் சரி, பழகாதவராயிருப்பினும் சரியே!) (புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: 'நீங்கள் உண்மையான இறைநம்பிக்கையாளர்களாய்த் திகழாதவரை சுவனம் புக முடியாது. நீங்கள்

ஒருவரையொருவர் நேசிக்காதவரை உண்மையான இறைநம்பிக்கையாளர்களாக விளங்க முடியாது. நீங்கள் எதனைச் செய்தால் உங்களிடையே நேசம் வளருமோ அத்தைகைய ஒரு செயலை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? உங்களிடையே ஸலாமைப் பரப்புங்கள்!' (முஸ்லிம்)

### நாவடக்கம்

அறிவிப்பாளர் : ஸஹ்ல் பின ஸஅத் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'தன் நாவையும் வெட்கத்தலத்தையும் பாதுகாத்துக் கொள்வதாக ஒருவர் பொறுப்பேற்றுக் கொண்டால் அவருக்கு சுவனம் கிடைத்திட நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.' (புகாரி)

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: அடியான், அல்லாஹ்வின் உவப்புக்குரிய ஒரு சொல்லை தன் நாவினால் மொழிகின்றான், ஆனால் அதில் அவன் கவனம் செலுத்தவில்லை (அதற்கு அவன் முக்கியத்துவம் தருவதில்லை) ஆனால் அல்லாஹ் அந்தச் சொல்லின் காரணத்தால், அவனுடைய தகுதியை பல படித்தரங்கள் உயர்த்திவிடுகின்றான். இவ்வாறே மனிதன் இறைவனுக்கு கோபமுண்டாக்கும் ஒரு சொல்லை அலட்சியமாகச் சொல்லி விடுகின்றான். அது அவனை நரகில் தள்ளி விடுகின்றது! (புகாரி)

## தீய குணங்கள்

### தற்பெருமை

அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: "எவனுடைய உள்ளத்தில் அணுவளவு தற்பெருமை இருக்குமோ, அவன் சுவனத்தில் நுழைய முடியாது." இதனைச் செவியுற்ற ஒரு மனிதர் கேட்டார்: "மனிதன் தன் ஆடைகளும் காலணியும் நன்றாக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றானே? (இதுவும் தற்பெருமையா? இத்தகைய அழகுணர்ச்சி கொண்ட மனிதன் சுவனப்பேற்றை அடைய முடியாதா?" அண்ணலார் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: "(இல்லை, இது தற்பெருமையில்லை) அல்லாஹ் தூய்மையானவன், தூய்மையையே விரும்புகின்றான். தற்பெருமையின் பொருள், அல்லாஹ்விற்கு நாம் அடிபணிந்து வாழவேண்டிய கடமையை நிறைவேற்றாமலிருப்பதும், பிற மக்களை இழிவாகக் கருதுவதும் ஆகும்." (முஸ்லிம்)

அறிவிப்பாளர் : ஹாரிஸ் பின் வஹ்ப் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: "பெருமையடிப்பவன் சுவனத்தில் நுழையமாட்டான். பொய்ப் பெருமை பேசித் திரிபவனும் சுவனத்தில் நுழையமாட்டான்." (அபூதாவூத்)

அறிவிப்பாளர் : அபூஸயீத் அல்குத்ரீ (ரலி)

நான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவிலக் கேட்டேன்: ‘‘இறைநம்பிக்கையாளனின் வேட்டி (கீழங்கி, கால்சட்டை) அவனது கெண்டைக்காலில் பாதிவரை இருக்கும். அதனைவிடக் கீழேயும் கணுக்கால்களுக்கு மேலேயும் இருந்தால் அதனால் பாவம் ஏதுமில்லை. இன்னும் அதனைவிடக் கீழே இருப்பது நரகத்திற்குரியதாகும். (அதாவது அது பாவகரமான ஒரு செயல்) இதனை (இந்தக் கடைசி வாக்கியத்தை மக்களுக்கு இதன் முக்கியத்துவமும் தெளிவாகிவிடட்டும் என்பதற்காக) அண்ணலார் மூன்று முறை கூறினார்கள். பிறகு ‘‘அகந்தையுணர்வினால் தன் கீழங்கியைப் பூமியில் இழுத்தவண்ணம் நடக்கும் மனிதனை இறைவன் மறுமைநாளில் ஏறிட்டும் பார்க்கமாட்டான் ’’என்று அண்ணலார் கூறினார்கள். (அபூதாவூத்)

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: ‘‘எவன் தன் கால்சட்டையை கர்வத்துடன் பூமியில் இழுத்துச் செல்கின்றானோ அவனை அல்லாஹ் மறுமைநாளில் ஏறெடுத்தும் பார்க்கமாட்டான். ( கருணைப் பார்வை பார்க்கமாட்டான் ) ’’

## கொடுமை

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: ‘‘இறுதித் தீர்ப்புநாள், கொடுமைக்காரனுக்கு இருள் மிக்கதாய் ஆகிவிடும். ’’ (புகாரி)

அறிவிப்பாளர் : அவ்ஸ் பின் ஷு ரஹ்பீல் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன்: ‘‘ஒருவன் ஒரு கொடுமைக்காரனுக்கு அவன் கொடுமைக்காரன் என்பதை அறிந்திருந்தும் துணைபுரிந்து வலுவூட்டினால், அவன் இஸ்லாத்தைவிட்டு வெளியேறிவிட்டான். ’’ (மிஷ்காத்)

## கோபம்

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: குத்துச்சண்டையில் அடுத்தவனை வீழ்த்துபவன் வலிமை வாய்ந்தவன் அல்லன், மாறாக கோபம் வரும்போது தன்னைத்தானே அடக்கிக் கொள்பவனே உண்மையான வலிமை வாய்ந்தவன் ஆவான். (அதாவது கோபம் வரும்போது இறைவனுக்கும் அவனுடைய தூதருக்கும் விருப்பமில்லாத செயலை தவிர்ப்பவன்) (புகாரி)

அறிவிப்பாளர் : அத்தியா அஸ் ஸஅதி (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: ‘‘கோபம் ஷைத்தானியப் பாதிப்பின் விளைவாகும். ஷைத்தான் நெருப்பால் படைக்கப்பட்டிருக்கின்றான். நெருப்பு, நீரால் மட்டுமே அணைகின்றது. எனவே, உங்களில் ஒருவருக்கும் கோபம் வந்துவிட்டால் அவர் ஒளு செய்து கொள்ளட்டும். ’’(அபூதாவூத்)

## பிறர் துன்பத்தைக் கண்டு மகிழ்தல்

அறிவிப்பாளர் : வாஸிலா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: ''உன் சகோதரனின் துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தாதே! ஆல்லாஹ் அவன் மீது கருனை புரிந்து ( அந்தத் துன்பததைக் களைற்து வபிடுவான்.) உன்னைத் துன்பத்தில் ஆழ்த்திவிடுவான்.''

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: 'எந்த மனிதனிடம் நான்கு குணங்கள் உள்ளனவோ அவன் அப்பட்டமான நயவஞ்சகனாவான். எவனிடம் அந்த நான்கு குணங்களில் ஏதேனும் ஒன்று உள்ளதோ அவனுக்குள் நயவஞ்சகத்தின் ஒரு குணம் உள்ளது (என்று பொருள்), அவன் அந்தக் குணத்தை விடாதவரை!

அந்த நான்கு குணங்களாவன்:

1. அவனிடம் ஓர் அமானிதப் பொருளை ஒப்படைக்கும் போது அவன் மோசடி செய்வான்.

2. பேசும் போது பொய் சொல்வான்.

3. வாக்களித்தால் அதை நிறைவேற்ற மாட்டான்.

4. எவரிடமாவது சண்டையிட்டால் வசைமொழிகளால் ஏசத் தொடங்குவான்.'' (புகாரி. முஸ்லிம்)

## பொய்

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: 'தன் இரு கண்களும் பார்த்திராத ஒன்றை தன் இரு கண்களுக்கும் காட்டுவதுதான் அனைதையும் விடப் பெரிய பொய் ஆகும்.' (புகாரி)

## கெட்டவற்றைப் பேசுதல்

அறிவிப்பாளர் : அபுத்தர்தா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: 'இறுதித் தீர்ப்புநாளில் இறைநம்பிக்கை யாளனின் தராசில் வை(த்து நிறு)க்கப்படும் பொருள்களிலேயே மிக கனமான பொருள் அவனது நற்குண்மாகும். தன் நாவால் வெட்கம் கெட்ட விஷயங்களைப் பேசுபவனையும் கெட்ட வார்த்தைகள் கூறுபவனையும் அல்லாஹ் மிகவும் வெறுக்கின்றான்.' (திர்மிதி)

## இரட்டை வேடம் போடுதல்

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் : 'உலகில் இரண்டு முகங்களைக் கொண்டிருந்த மனிதனை இறுதித்தீர்ப்பு நாளில் மிகத் தீய மனிதனாக நீங்கள் காண்பீர்கள். அவன் சிலரை ஒரு முகத்துடன் சந்திப்பான், வேறு சிலரை இன்னொரு முகத்துடன் சந்திப்பான்.' ( புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : அம்மார் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: 'உலக வாழ்வில் இரட்டை வேடம் போட்டவனுக்கும் மறுமை நாளில் நெருப்பாலான இரண்டு நாக்குகள் இருக்கும்.' (அபூதாவூத்)

## புறம் பேசுதல்

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி)

ஒரு முறை 'புறம் பேசுதல் என்பது என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். மக்கள், 'அல்லாஹ்வும் அவனுடைய திருத்தூதருமே அதிகம் அறிந்தவர்கள்' என்று கூறினார்கள். அண்ணலார், 'உன் சகோதரனைப் பற்றி அவன் செறுக்கும் முறையில் நீ பேசுவதே புறம் பேசுவதாகும்' என்று கூறினார்கள். மீண்டும் நபியவர்களிடம் வினவப்பட்டது. 'கூறுகின்ற அந்த விஷயம் (குறை) என் சகோதரனிடம் (உண்மையிலேயே) காணப்பட்டாலுமா (நான் அவனைப் புறம் பேசியவனவேன்)?' அண்ணலார் விளக்கினார்கள்: 'நீ கூறும் விஷயம் (குறை) அவனுள் இருந்தால் அது புறம் பேசுவதாகும். நீ கூறும் விஷயம் அவனிடம் இல்லயென்றால், அவனை நீ அவதூறாகப் பேசிவிட்டாய், அவன் மீது இட்டுக் கட்டிவிட்டாய் என்பதாகும்.' (மிஷ்காத்)

## தகாத ஆதரவும் பாரபட்சமும்

அறிவிப்பாளர் : அபூஉமாமா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: 'இறுதித் தீர்ப்பு நாளில் மிக மோசமான நிலையில் இருப்பவன் பிறருடைய உலக வாழ்வை வளப்படுத்துவதற்காக தன் மறுமையை அழித்துக் கொண்டவனேயாவான்.' (மிஷ்காத்)

அறிவிப்பாளர் : அபூ∴பைலா (ரலி)

நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வினவினேன்: 'அல்லாஹ்வின் தூதரே! ஒருவன் தன் சமூகத்து மக்களை நேசிப்பது இனவாதமாகுமா?' அதற்கு அண்ணலார் 'இல்லை! மாறாக, மனிதன் தன் சமுதாய்த்தார் (பிறர் மீது ) கொடுமை செய்ய முற்படும்போது அவர்களுக்குத் துணை புரிவதுதான் இனமாச்சரியமாகும்' என்றார்கள். (மிஷ்காத்)

அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: 'எவன் அநீதியான விஷயத்தில் தன் சமுதாயத்தினருக்கு உதவி புரிகின்றானோ அவன் கிணற்றில் விழுந்து கொண்டிருக்கும் ஒட்டகத்தின் வாலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பவனைப் போன்றவனாவான். அந்த ஒட்டகத்துடன் சேர்ந்து அவனும் கிணற்றில் வீழ்வான்.' (அபூதாவூத்)

## பொருத்தமற்ற புகழ்ச்சி

அறிவிப்பாளர்: மிக்தாத் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: 'புகழ்பவர்களை நீங்கள் கண்டால் அவர்களின் வாயில் மண்ணை வாரி இறையுங்கள்!' (முஸ்லிம்)

**பொய்ச் சாட்சி கூறல், கேலி, வாக்குறுதி மீறல், சண்டை – சச்சரவு, வாக்குவாதம்**

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ‘உன்னுடைய சகோதரனிடம் வாக்குவாதம் புரியாதே! அவரைக் கேலி செய்யாதே! வாக்குறுதி செய்துவிட்டு அதனை மீறாதே!’ (திர்மிதி)

**குறை கூறல்**

அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி)

நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு முறை கூறினேன்: ‘ஸபிய்யா ‘இப்படி’ இருக்கிறார் என்னும் குறையே அவருக்குபட போதுமானதாகும்.’ (அதாவது ஸபிய்யா குள்ளமானவர் என்பது அவருக்கு ஒரு பெரும் குறையாகும்) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘ஆயிஷா! நீ எவ்வளவு மாசு படிந்த சொல்லை உன் வாயினால் வெளிப்படுத்தியுள்ளாய் எனில், அதனைக் கடலில் கரைத்துவிட்டால் அது கடல் முழுவதையும் அசுத்தப்படுத்திவிடும்.’ (மிஷ்காத்)

**ஆராயாமல் செய்திகளைப் பரப்புதல்**

அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் (ரலி)

பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: ஷைத்தான் மனித வேடத்தில் செயலாற்றுகின்றான். அவன் மக்களிடம் வந்து பொய்ச் செய்திகளை எடுத்துரைக்கின்றான். பிறகு மக்கள் கலைந்து சென்றுவிடுகின்றனர். (அதாவது சபை முடிந்துவிடுகின்றர். மக்கள் கலைந்து சென்றுவிடுகின்றனர்) அப்போது அவர்களில் ஒருவன் ‘நான் இந்த விஷயத்தை ஒரு மனிதனடமிருந்து செவியுற்றேன். அவனது முகம் எனக்குத் தெரியும். ஆனால், பெயர் மட்டும் தெரியாது’ என்ளு கூறுவான். (முஸ்லிம்)

**கோள் சொல்லுதல்.**

அறிவிப்பாளர் : ஹு தைஃபா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘கோள் சொல்பவன் சுவனத்தில் நுழையமாட்டான்.’(புகாரி, முஸ்லிம்)

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி)

ஒரு முறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இரு மண்ணறைகளின் அருகில் நடந்து சென்றார்கள். அப்போது அண்ணலார் நவின்றார்கள்: ‘இந்த (மண்ணறைவாசிகள்) இருவரும் வேதனைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேதனை அவர்களால் தவிர்க்க முடியாதிருந்த குற்றத்திற்காகத் தரப்படவில்லை. அவர்கள் அதனை விட்டு எளிதில் தப்பித்திருக்க முடியும். ஐயமின்றி அவர்களின் குற்றம் பெரியதுதான். அவர்களில் ஒருவன் கோள் சொல்லிக் கொண்டிருந்தான். இன்னொருவன் சிறுநீர் கழிக்கும்போது தெறிக்கும் சிறுநீர்ந்துளிகளை (மேலே படுவதிலிருந்து) தவிர்த்துக்கொள்ளாமல் இருந்துவிட்டான்.’ (புகாரி)

## பொறாமை

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘உங்களை நீங்களே பொறாமையிலிருந்து காப்பாற்றிக்கொள்ளுங்கள். ஏனெனில் நெருப்பு விறகைச் சாம்பலாக்கி விடுவதைப் போல் பொறாமை நற்செயல்களை சாம்பலாக்கி விடுகின்றது.’ (அபூதாவூத்)

## கெட்ட பார்வை

அறிவிப்பாளர் : ஜரீர் பின் அப்துல்லாஹ் (ரலி)

நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் (அந்நியப் பெண் மீது) திடீரெனப் பார்வை பட்டுவிடுவது குறித்துக் கேட்டேன். அண்ணலார், ‘நீர் உம் பார்வையைத் திருப்பிக் கொள்ளும்’ என்று கூறினார்கள். (முஸ்லிம்)

அறிவிப்பாளர் : புரைதா (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: ‘அலீயே! ஓர் அந்நியப் பெண் மீது திடீரெனப் பார்வை பட்டுவிட்டால் உடனே பார்வையை திருப்பிக் கொள்ளுங்கள். அவள் மீது இரண்டாவது பார்வையைச் செலுத்தாதீர்கள், முதல் பார்வை உம்முடையது. இரண்டாவது பார்வை உம்முடையதன்று. (மாறாக, ஷைத்தானுடையது)’ (அபூதாவூத்

முற்றும்